இந்திய உயர் ஸ்தானிகராலயம்
கொழும்பு

ஊடக அறிக்கை

மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலைகளுக்கான இந்திய நன்கொடை உதவி திட்டங்களுக்கான அடிக்கல் நாட்டல்

2026 செப்டெம்பர் 16 ஆம் திகதியன்று நடைபெற்ற நிகழ்வுகளில் மன்னார் – மாவட்ட பொது வைத்தியசாலைக்கான விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு மற்றும் முல்லைத்தீவு – மாவட்ட பொது வைத்தியசாலைக்கான நான்கு மாடி மருத்துவ விடுதி தொகுதி ஆகியவற்றின் நிர்மாணத்துக்காக இலங்கை ஜனாதிபதி அதி மேதகு அநுர குமார திசாநாயக்க, இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா மற்றும் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ ஆகியோரால் கூட்டாக அடிக்கல் நாட்டப்பட்டது.

2. இந்த நிகழ்வுகளில் வட மாகாண ஆளுநர் கௌரவ நாகலிங்கம் வேதநாயகன், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள், சுகாதர அமைச்சின் செயலாளர் மற்றும் உயரதிகாரிகள், மாகாண நிர்வாக முதன்மைச் செயலர் மற்றும் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

3. இந்த இரு திட்டங்களும் இந்திய அரசாங்கத்தின் நன்கொடை உதவியுடன் தலா 600 மில்லியன் இலங்கை ரூபா செலவில், மொத்தமாக 1.2 பில்லியன் இலங்கை ரூபா மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படுகின்றன. மன்னாரில் அமுல்படுத்தப்படும் திட்டத்தின் கீழ், விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுக்கான இருமாடி கட்டடத்தை அமைத்தல், அப்பிராந்திய மக்களுக்குத் உயிர் காக்கும் தக்க தருணத்தில் துரிதமான அவசர சிகிச்சையை வழங்கி உயிர்களைக் காக்கத் தேவையான மருத்துவ உபகரணங்களை வழங்கல் ஆகியவை அடங்குகின்றன. இத்திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) செப்டெம்பர் 2025 இல் கைச்சாத்திடப்பட்டது.

4. இதேவேளை, முல்லைத்தீவில் அமையவுள்ள நான்கு மாடி மருத்துவ விடுதி வளாகத்தில், கட்டட நிர்மாண பணிகளுடன் தேவையான வசதிகள் மற்றும் உபகரணங்களை பொருத்துதலும் அடங்கும். இதன் மூலம் நோயாளிகளுக்கான பரிசோதனைகளை அதிகரிக்கவும், அதன் மூலம் தொற்றா நோய்களால் ஏற்படும் திடீர் மரணங்கள் மற்றும் பிற மருத்துவமனைகளுக்கு நோயாளிகளை மேலதிக சிகிச்சைக்கு அனுப்பும் தேவையை குறைக்கவும் உதவும். இந்தியத் துணை ஜனாதிபதி மாண்புமிகு சி.பி. இராதாகிருஷ்ணன் அவர்களின் இலங்கை விஜயத்தின்போது, ஏப்ரல் 2026 இல் இத்திட்டத்திற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

5. இலங்கையின் சுகாதாரத் துறையில் இந்தியா மேற்கொண்டுவரும் குறிப்பிடத்தக்க பல அபிவிருத்தி ஒத்துழைப்புத் திட்டங்களின் வரிசையில் இத்திட்டங்களும் இணைகின்றன. நாடு முழுவதும் செயல்படுத்தப்படும் '1990 சுவ செரிய' அம்புலன்ஸ் சேவை; கொவிட்-19 பெருந்தொற்றின் போது வழங்கப்பட்ட மருத்துவ உதவிகள்; டிக்கோயாவில் 150 கட்டில்கள் கொண்ட பல்நோக்கு மருத்துவமனை நிர்மாணம்; யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும்

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைகளை மேம்படுத்துதல் மற்றும் அவற்றுக்கான ஆதரவு; மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை சத்திர சிகிச்சைப் பிரிவு நிர்மாணம் ஆகியவை இவ்வாறான செயல்திட்டங்களுக்கான சில முக்கிய உதாரணங்களாகும். இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையிலான அபிவிருத்தி ஒத்துழைப்புத் திட்டங்களின் மொத்த மதிப்பு 7.5 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமாக காணப்படுகின்றது, இலங்கை முழுவதும் உள்ள 25 மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்படும் சுமார் 880 மில்லியன் டொலர் மதிப்பிலான நன்கொடை அடிப்படையிலான உதவிகளும் இதில் அடங்குகின்றன.

****

கொழும்பு
16 செப்டெம்பர் 2026